23rd November 1955]

THE HON. SRI B. PARAMESWARAN : It is because that the Government are not able to find alternative employment for these rickshaw pullers, cycle-rickshaw riders and hand-cart pullers that the question is being examined very thoroughly.

SRI A. RATNAM : ஸார், சென்னையில் 4,000 ரிக்ஷா இழுப்பவர்கள் இருக்கிறார்கள் என்பதும், 14,000 கட்டை வண்டி இழுப்பவர்கள் இருக்கிறார்கள் என்பதும் உண்மையா ? அவர்களுக்கு ஒரு கமிட்டியை நியமிக்கவேண்டும். அவர்களுடைய கூலி, வாழ்க்கைத்தரம், இன்னும் வேலை முதலியவைகளைப் பரிசீலனை செய்து ஒரு யாதாஸ்தை சமர்ப்பிக்க வேண்டும் என்றும் அதற்காக ஆவன செய்யவேண்டுமென்பதற்காகவும் ஒரு கமிட்டியை நியமிக்க வேண்டும் என்று அவர்கள் தீர்மானம் செய்து அனுப்பி இருக்கிறார்கள். அதன்படி அவர்களுக்கு நன்மை செய்ய அரசாங்கம் ஒரு கமிட்டியை நியமிக்க முன்வருமா ?

THE HON. SRI B. PARAMESWARAN : ரிக்ஷா வண்டிக்காரர்கள் சங்கம், கை வண்டி இழுப்பவர்கள் சங்கம் முதலிய தலைவர்கள் வந்து என்னைப் பார்த்தார்கள். அவர்களுடைய லைசென்சுகளை கான்சல் செய்து விட்டு அவர்களுக்கு வேலை இல்லாமல் செய்வதைவிட கொஞ்சம் கொஞ்சமாக அவர்களுக்கு வேலைகள் வாங்கிக் கொடுத்து விட்டு அதற்குப் பிறகு ரிக்ஷா இழுப்பதையும், கை வண்டி இழுப்பதையும் நிறுத்திவிட வேண்டும் என்று கவர்ன்மெண்ட் உத்தேசித்திருக்கிறது. கொஞ்சம் கொஞ்சமாக பாக்டரிகளிலும் மில்களிலும் இப்படி பல இடங்களில் அவர்களுக்கு வேலையை வாங்கிக் கொடுத்துவிட்டு அதன் பிறகு ரிக்ஷா இழுப்பதையும், கட்டை வண்டி இழுப்பதையும் நிறுத்துவதற்கு சர்க்கார் ஆலோசனை செய்துகொண்டு வருகிறார்கள்.

SRI S. C. C. ANTONY PILLAI : Will the Government consider bringing in legislation to fix a maximum load to be pulled by hand-cart pullers?

THE HON. SRI B. PARAMESWARAN : I will examine that suggestion.

SRI S. RAMALINGAM : ரிக்ஷா இழுப்பவர்களுக்கு மாற்று வேலை கொடுப்பதைப்பற்றி சர்க்கார் உத்தேசித்துக்கொண்டிருப்பதாக சொல்லுகிறார். ட்ராம்வே தொழிலாளர்களுக்கு மாற்று வேலை கொடுக்கப்பட்டிருப்பதைப்போல் இவர்களுக்கும் வேலை கொடுக்க சர்க்கார் உத்தேசித்திருக்கிறார்களா ?

THE HON. SRI B. PARAMESWARAN : ட்ராம்வே தொழிலாளர்கள் எல்லோருக்கும் வேலை கொடுத்திருப்பது கனம் அங்கத்தினருக்கு தெரியாமல் இருப்பதைப்பற்றி நான் வருத்தப்படுகிறேன்.

Firka Development Committees

(Question Nos. 2782 and 2783 taken together.)

* 2782 *Q.*—SRI M. NARAYANA KURUP : Will the Hon. the Minister for Finance be pleased to state how many Taluk and Village Development Committees have so far been constituted in Malabar district in connexion with the Development Plans?

THE HON. SRI C. SUBRAMANIAM : Forty-three Committees for Planning areas and 662 Village Development Committees have been constituted in Malabar district.